# திருவாலி

**திருவாலி திருநகரி:** தமிழ்நாட்டில் இரண்டு திருநகரிகள் இருக்கின்றன. இரண்டும் ஸ்ரீவைஷ்ணவம் விளைந்த இடம். ஒருதிருநகரியில் நம்மாழ்வார் அவதரித்தார்; மற்றொரு திருநகரி திருமங்கையாழ்வார் அவதாரஸ்தலம். நம்மாழ்வாரின் திருநகரியை ஆழ்வார் திருநகரி என்பர். திருமங்கையாழ்வாரின் திருநகரியைத் திருவாலி திருநகரி என்பர். திருவாலியும், திருநகரியும் ஒரே ஊராகவே இருந்ததாகத் தெரிகிறது. ஆயினும், இந்நாளில் திருவாலிவேறு திருநகரிவேறு என்று இடங்கள் தனித்தனியாகவே கூறப்படுகின்றன. திருவாலியிலிருந்து திருநகரிக்கு ஏறக்குறைய நான்கு மைல் தொலைவு இடைப்பட்டு இருக்கிறது.

# ஸ்தலசயனத்துறைவார்

திருமங்கையாழ்வாருக்கு 'ஆலி நாடன்' என்ற திருநாமமும் உண்டு. திருநகரி, குறையலூர் முதலிய பகுதிகள் எல்லாம் சேர்ந்து 'திருமங்கை நாடு' என்ற பெயரோடு பெரிய நிலப்பகுதியாக இருந்தது என்றும், அதன் அரசராக ஆழ்வார் இருந்ததாகவும் தெரிகிறது. திருவாலியின் செழிப்பையும், ஆழ்வாருக்குத் திருவாலியில் உள்ள ஈடுபாட்டையும், திருவாலியின் அமைப்பையும் காணும்போது திருவாலி தலைநகரமாக இருந்திருக்கக் கூடும் என்று அறியப்படுகிறது. எங்கும் ஆலைகள் நிறைந்திருந்ததாகக் கூறும் ஆழ்வாரின் திருவாக்கும் இதற்குத் துணைபுரிகிறது'

திருமங்கையாழ்வாரின் திருவாக்கில் வயலாலி மணவாளன் என்றும் எவரி வெஞ்சிலையான் என்றும் திருநாமங்கள் வெளிவந்துள்ளன. இந்த எம்பெருமான்கள் திருநகரியில் ஆழ்வார் ஸந்நிதியிலேயே எழுந்தருளி இருக்-

கிறார்கள். திருவாலியில் இப்போது லஷ்மீ நரசிம்மனே எழுந்தருளி இருக்கிறார். ஆயிரம் ஆண்டுகளில் பல மாறுதல்கள் ஏற்படுவது இயற்கையே!

ஆனால், ஆண்டுதோறும் பங்குனி உத்திரத்திற்கு முதல் நாள் திருநகரியிலிருந்து வயலாலி மணவாளன் திருவாலிக்கு எழுந்தருளியிருக்கிறார். திருக்கல்யாண உத்ஸவம் நடைபெறுகிறது. அதன் பிறகு திருநகரிக்கு எழுந்தருளும்போது திருமணங் கொல்லை என்னுமிடத்தில் (மறக்க முடியாத) அவசியம் ஸேவிக்க வேண்டிய வேடு பறி உத்ஸவம் நடைபெறுகிறது

திருவாலியில் அழகிய சிங்கர் திருவை வலப்பக்கத்தில் அமர்த்திக் கொண்டு (ஆலிங்கனம் செய்து கொண்டிருக்கிறார்) அணைத்துக் கொண்டிருக்கிறார். இறையும் அகலகில்லேன் என்று சேர்ந்திருக்கும் இந்தத் திவ்ய தம்பதியர் நம்மை அன்போடு வணங்குவோருக்கு விரைவில் நற்பயன்களை அளிப்பவர்களாக முகம் மலர்ந்து ஸேவை ஸாதிக்கிறார்கள்.

**இப்படியும் ஒரு ஆசையோ!** திருவாலியம்மானே! நீ தான் திருக்கடல் மல்லை எம்பெருமான்! ஐயமில்லை! தொண்டர் தங்கள் சிந்தையுள்ளே முளைத்தெழுந்த தீங்கரும்பன்றோ நீ! பிரம்மாமுதலானவர்கள் உன்னைச் சயன திருக்கோலத்தில் ஸேவிக்க வேண்டுமானால் திருப்பாற்கடலுக்கே செல்ல வேண்டும். பாற்கடலில் உனக்கு இருக்கும் போக்யம் வேறு எதிலுமில்லை. திருப்பாற்கடல் உனக்கு மஹாலக்ஷ்மியைக் கொடுத்து நாராயணனாக இருந்த உன்னை ஸ்ரீமந் நாராயணனாக விளங்கச் செய்தது! உன் பெருமையும் பெருகத் தொடங்கியது. ஆதலால், பாற்கடலில் நீ ஆசை கொண்டிருப்பது நியாயமே. புண்டரீக மஹரிஷியின் பக்தியை நன்கு உணர்ந்தாய்! பாற்கடலிலேயே சயனித்துக் கொண்டிருந்தால் எவரும் நம்மிடம் வரார் என்பதை அறிந்து கொண்டு அந்த முனிவருக்கு அருள் புரியத் திருக்கடல்

மல்லைக்கு வந்தாய்! வெள்ள வெள்ளத்தின்மேல் ஒரு பாம்பை மெத்தையாக விரித்து அதன்மேல் படுத்துப் பழகிய நீ, கடற்கரை மணலில் சயனித்துக் கொள்ளவும் கற்றது எவ்வாறோ! புண்டரீக மகரிஷிக்காகவும், மற்றவர்களுக்காகவும் சங்கு தங்கு கடல்மல்லையைப் போக்யமான இடமாக ஆக்கிக் கொண்டு சயனித்து இருக்கிறாய்! இதுவும் சரியான செயல் தான்!

ஆனால், அடுத்த செயல் எனக்கு மிகவும் வியப்பை அளிக்கிறது! நிலையாக இருப்பதற்கு நீ ஒரு இடத்தைத் தேடிக் கொள்ள வேண்டும் என்று விரும்பினால் இந்நிலவுலகில் உன் திருவுள்ளத்திற்கு ஏற்ற இடமே இல்லையா! ஆராமம் சூழ்ந்த அரங்கம் இல்லையா? சிந்து பூ மகிழும் திருவேங்கடம் இல்லையா? அல்லது கல்லுயர்ந்த நெடுமதிள் சூழ் கச்சிப்பதிதான் இல்லையா? எல்லா இடங்களையும் விட்டு என் மனத்தில் வந்து சேர்ந்தனையே! தூய்மையில்லாத மனத்தையும் தூய்மையாக்கிக் கொண்டு வந்தமர்ந்தனை! உன்னுடைய கருணை எதைத்தான் செய்யாது?

விதுரருடைய திருமாளிகைக்குச் சென்று அவரளித்த உணவை உன்னுடைய கடாக்ஷத்தினாலே தூய்மையாக்கிக் கொண்டு உன் திருவுள்ளத்திற்கு உகந்தவாறு புசித்தனையே! கூனி வைத்திருந்த சந்தனத்தை விரும்பி வாங்கிப் பூசிக் கொண்டு மகிழ்ந்தாயே! மாலாகாரரும் எதிர் பாராமல் இருக்கும்போது அவரிருந்த இடம் சென்று மாலையை வாங்கி அணிந்து மகிழ்ந்தாயே! உன்னுடைய அருள் எதைத்தான் செய்யாது. உன்னுடைய விருப்பத்திற்கு ஏற்றவாறு ஒரு பொருளை மாற்றிக் கொள்ளும் சக்தி உனக்கே உண்டு. ஆதலால் என் மனத்தையும் தூய்மையாக்கிக் கொண்டு அருள் புரிந்து இங்கு என்னுள் புகுந்தாய்! இங்கேயே நிலைத்து இருக்கிறாய்!

கிடைக்கப்பெறாத நீ கிடைத்துவிட்டாய்! இனி இவ்விடம் விட்டுப் போக உன்னால் இயலாது. என்மீது உனக்கு இருக்கும் அருள்தானே உன்னை இங்குக் கொண்டு வந்து சேர்த்தது. அந்த அருள் மாறினாலன்றோ நீ இவ்விருந்து போக முடியும்! அருளும் மாறாது; இங்கிருந்துப் போகவு இயலாது.

தேனுண்ணும் வண்டுகள் சண்பக மலர்களிலும், மல்லிகை மலர்களிலும் இருக்கும் தேனைப் பருகச் சென்று, அங்கு அவற்றோடே தழுவி இருந்தன. குளிர்ச்சிமிக்க மலர்களும் வண்டுகளுக்கு வெப்பம் அளிப்பதுபோல் தோன்றியதாம்! அந்த மலர்களோடு இருப்பதிலும் அலுப்பு ஏற்பட்டுவிட்டதாம். அதனால்தான் தென்னை இளம் பாளைகளில் உள்ள மகரந்தத் தாதுகளிலே போய் அங்கே அலைகின்றவாம். நீயும் பாற்கடலையும், திருக்கடல் மல்லைப் பகுதியையும் துறந்து என்னை விரும்பி என் மனத்தே வந்து தங்கியிருக்கிறாய் என்கிறார் ஆழ்வார். தானாகவே வந்து ஆட்கொள்பவன் அணியாலி அம்மான்.

**பரகாலன் போற்றும் திருவாலி மாயன்:** இந்த ஆத்மா எம்பெருமானுக்கே அடிமை என்பதை சாஸ்திரங்கள் வலியுறுத்திக் கூறுகின்றன. இந்த ஆத்மாவை ரக்ஷிக்க அவனிருக்க வேண்டும், அவனையடைந்து தூமலர் தூவித்தொழுது வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க இந்த ஆத்மா நற்கதியைப் பெறுகிறது. நற்கதியைக் கொடுக்க பகவான் (ஸ்ரீமந் நாராயணன்) தயாராக இருக்கிறான்; ஆத்மா நற்கதியை அடைய இதைவிடச் சிறந்தவழி வேறு இல்லை. இதை மறந்து தவம் செய்கிறார்கள். இது எளிய செயலன்று; மிகவும் சுலபமான வழியை விட்டுத் துயர்தரும் வழியை எவரேனும் பின் பற்றுவரோ! 'ஊன் வாட உண்ணாது உயிர் காவலிட்டு உடலில் பிரியாப் புலனைந்தும் நொந்து, தாம் வாட வாடத்

தவம் செய்ய வேண்டா! என்று கூறினார் திருமங்கையாழ்வார் புண்ணிய தீர்த்தங்களில் நீராடுவதற்காகப் பலர் யாத்திரையாகச் செல்கின்றார்கள். இவற்றால புண்ணியம் அடையலாம். ஆனால் இவ்வாறெல்லாம் புண்ணியத்தை மிகுதியாகச் சேர்த்தால் ஒருவேளை பகவானை அடையும் வழியைக் காட்டக்கூடும்! எம்பெருமானை நேராகவே அடைவதற்கு வழி இருக்கும்போது இவ்வெளிய வழியைப் பின்பற்ற வேண்டாவோ! 'பொருப்பிடையே நின்றும் புனல் குளித்தும், ஐந்து நெருப்பிடையே நிற்கவும் நீர் வேண்டா—விருப்புடைய வெஃகாவே சேர்ந்தானை மெய்ம்மலர் தூய்க் கைதொழுதால் அஃகாவே தீவினைகளாய்ந்து' என்றார் பேயாழ்வார்.

ஆழ்வார்களும் ஆசாரியர்களும் காட்டிக் கொடுத்த அர்ச்சாவதார எம்பெருமான்களை அடைந்து வணங்குவதே நாம் உய்யும் வழியாகும். வாலியிடம் அஞ்சிய சுக்ரீவன் இராமனை சரண் அடைந்தான்; ராமனே தன்னைக் காப்பான் என்று நம்பினான். இராமன் மிக்க வலிமை கொண்ட வாலியை வென்று சுக்ரீவனுக்கு நல்வாழ்வு அளித்தான்) அவனே திருவாலி எம்பெருமான். கரதூஷணர்களை வென்றவுடன் சீதை இராமனை ஆலிங்கனம் செய்து கொண்டாள். (இங்கும் திருமகள் எம்பெருமானை ஆலிங்கனம் செய்து கொண்டிருக்கிறாள் என்றும் கூறுவார்கள்.) இவனைச் சரணடைந்தால் நற்கதி பெறலாம்; நான் இவ்வாறு பேறு பெற்றேன். என்கிறார் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்

கழன்றுபோம் வாயுவினைக் கட்டமைக் தீர்த்த
முழன்று போயசடமழுந்தேன்—அழன்று
பொருவாலி காலன் பரகாலன் போற்றும்
திருவாலி மாயனையே சேர்ந்து.

---